**2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 20–ம்** தேதி கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கூடலூர், நீலகிரி மாவட்டம், **அசல் வழக்கு எண்.45/2021** 1973ஆம் ஆண்டு ஆணையுறுதி ஆவணச் சட்டம் 10–வது விதியின் படி திருமதி. A. மகேஸ்வரி, தலைமை எழுத்தர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் : **திரு. பாப்பாத்தி (எ) மேரி (PW -1)** | தாலூக்கா : கூடலூர் |
| கணவர் பெயர் : திரு.சின்னசாமி | சமயம் : – |
| ஜாதி : – | கிராமம் : கோக்கல் |
| தொழில் : – | வயது : 60/2026 |

---

**20.04.2026**

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**1–ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :**

**1).** நான் வாரிசு சான்றிதழ் வாங்கிய பிறகு பிரதிவாதிகள் 2வதாக ஒரு வாரிசு சான்றிதழ் வாங்கியிருக்கிறார்கள். அதனால், பிரதிவாதிகள் வாங்கிய வாரிசு சான்றிதழை ரத்து செய்ய வேண்டி இவ்வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன். எனக்கு ஆங்கிலம் எழுத, படிக்க தெரியாது. வழக்குரையில் என்னுடைய மதத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். என்னுடைய வழக்குரை, ஆவணங்களில் என்னுடைய தகப்பனார் பெயரை குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய தகப்பனார் பெயர் முகமது உசைன் ஆகும். என்னுடைய மதத்தை காண்பிப்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்திருக்கிறேனா என்று கேட்டால் திருமண சான்றிதழ் தாக்கல் செய்திருக்கிறேன்.

**2).** எனக்கும் சின்னசாமிக்கும் 20.10.2006ஆம் தேதி திருமணம் நடைபெற்றது. திருமணம் ஊட்டி பதிவு அலுவலகத்தில் நடைபெற்றது.

P. MURUGESAN Digitally signed by P. MURUGESAN Date: 2026.04.20 17:50:38 +0530

எங்களது திருமணத்திற்கு வன அலுவலர்கள் வந்திருந்தார்கள். குறிப்பாக நவாப் என்ற நபரும் மற்றொரு நபர் அவர் பெயர் எனக்கு தெரியவில்லை. அவர் வன அலுவலகத்தில் பணியாற்றி வந்தார். அவரும் எங்களது திருமணத்திற்கு வந்திருந்தார். எங்கள் திருமணத்தில் சின்னசாமியின் குடும்பத்தார்களோ, எங்களது குடும்பத்தார்களோ பங்கேற்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.4 சான்றாவணத்தில் பதிவு அலுவலரின் முத்திரை எதுவும் இல்லை என்று சொன்னால் சரிதான். கதவு எண்.2/321 வீடு எப்போது வாங்கப்பட்டது என்று கேட்டால், அது என் கணவர் இருந்த வீடு. அதில் நான் இருக்கிறேன்.

**3).** வா.சா.ஆ.9 ரேஷன் கார்டில் வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ள கதவு எண்.2/321 குறிப்பிடவில்லை என்றும், வேறு கதவு எண் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றும் சொன்னால் சரிதான். கதவு எண்.2/321–லிருந்து என்னை விரட்டிவிட்டார்கள். அதனால் ரேஷன் கார்டில் வேறு கதவு எண் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ரேஷன் கார்டு 2017ஆம் ஆண்டு வாங்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் சரிதான். என் கணவர் சின்னசாமி 19.02.2016ஆம் தேதி இறந்துவிட்டார். வா.சா.ஆ.8 ஆதார் அட்டையில் கதவு எண்.1/319 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று சொன்னால் சரிதான். கதவு எண்.1/319–ல் இருந்ததால், அந்த கதவு எண் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

**4).** வா.சா.ஆ.6 வாரிசு சான்றிதழில் கதவு எண்.1/320 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று சொன்னால் சரிதான். 04.04.2016ஆம் தேதி 2ஆம் பிரதிவாதி சின்னசாமியின் வாரிசு சான்றிதழ் கேட்டு மனு கொடுத்தார் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. 2–ஆம் பிரதிவாதியின் மனுவை வட்டாட்சியர் அப்துல் ரகுமான் நீதிமன்றத்தில்

P. MURUGESAN
Digitally signed by P. MURUGESAN
Date: 2026.04.20 17:50:41 +0530

பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு கூறி மனுவை நிராகரித்துவிட்டார் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2 வாரிசு சான்றிதழ் 16.08.2016–ஆம் தேதி வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். நான் அசல் ஆவணங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். அசல் ஆவணங்கள் 1, 2 பிரதிவாதிகள் வசம் இருக்கிறது. என்னுடைய அம்மாவின் பெயர் ஐஸ்மா. என் பெற்றோர்கள் முஸ்லீம் மதத்தை சேர்ந்தவர்கள் என்று சொன்னால் சரிதான். என்னுடைய அசல் பெயர் பாப்பாத்தி ஆகும். என்னுடைய அசல் பெயர் சம்ருநிஷா என்று சொன்னால் சரியல்ல.

**5).** நான் முஸ்லீம் மதத்தை சேர்ந்த நபர் என்று சொன்னால் சரிதான். அதன் பின்பு நான் கிறிஸ்தவ மதத்திற்கு மதம் மாறினேன் என்று சொன்னால் சரிதான். மதம் மாறியதற்கு ஆவணங்கள் நான் தாக்கல் செய்திருக்கிறேன். நான் தற்போது இந்துவாக மதம் மாறியிருக்கிறேன். அதற்கான ஆவணங்கள் நான் தாக்கல் செய்யவில்லை.

**(1–ஆம் பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியின் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.)**

P. MURUGESAN

Digitally signed by P. MURUGESAN
Date: 2026.04.20 17:50:45 +0530